# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 சித்திரை21 (4-05-1998) திங்கட்கிழமை UTHAYAN- A lively National Tamil Daily கதிர்:134



பொது சன நூலகம்
5 MAY 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


## வன்னிப் படையினருக்கான பிரதான ஆயுத களஞ்சியம் வெடித்து சிதறியது

வவுனியா, மே 4

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு பிரதான விநியோக முகாமாக விளங்கும் வவுனியா, 211 ஆவது முகாமில் உள்ள ஆயுதக் களஞ்சியம் ஒன்று வெடித்துச் சிதறியது.

நேற்று நண்பகல் சுமார் 12.38 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பாரிய ஒரு வெடிச்சத்தம் கேட்டதை அடுத்து நிலத்துக்கு அடியில் உள்ள அந்தக் களஞ்சியம் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது.

களஞ்சியத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த பல கோடி ரூபா பெறுமதியான நவீன ஆயுதங்கள் தீயினால் முற்றாக அழிந்திருக்கக் கூடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டபோதிலும் உள்ளே இருந்த வெடிப்பொருள்கள் தொடர்ந்து வெடித்துக் கொண்டிருந்தமையால் நேற்று இரவு வரை தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் இரு சிப்பாய்கள்உயிரிழந்ததாகவும் — ஒரு சிப்பாய் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும்— தகவல்கள் வெளியாகி உள்ள போதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இராணுவத்தினருக்குச் சொந்தமான ரக் ஒன்றும் இதில் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதக் களஞ்சியம் வெடித்து தீப்பிடித்த சம்பவத்தை அடுதது வவுனியா நகரம் முழுவதும் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாக

(பத்தாம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. பிரதிநிதி வன்னி பயணம்

# புலிகள் இரு நாள் யுத்த நிறுத்தம்!

## புலிகளின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 4

யுத்தம் காரணமாக சிறுவர்கள் எதிர் நோக்கியுள்ள பாதிப்புக்கள் பற்றி ஆய்வு செய்வதற்காக இலங்கை வந்துள்ள ஐ. நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு இராணுவக் கட்டுப் பாடற்ற வன்னிப் பகுதிக்கும் செல்ல உள்ளார். இதனையொட்டி விடுதலைப் புலிகள் இரு நாள்கள் போர் ஓய்வு செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

நேற்று இலங்கை வந்துள்ள ஒட்டுணு எதிர்வரும் புதன், வியாழன் ஆகிய இரு தினங்களும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குச் சென்று அங்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களையும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாஞ்சோலையில் ஊர்காவலர் காயம்

மட்டக்களப்பு, மே 4

மட்டக்களப்பு மாஞ்சோலை பொலீஸ் காவல் நிலையம் மீது நேற்று முன் தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

30 நிமிடங்கள் இடம் பெற்ற இத்தாக்குதலில் ஊர்காவல் படை வீரரொருவர் காயமடைந்தார்.

ரி 56- ரக துப்பாக்கி - 1, 38 ரிவோல்வர்- 1, ரவைகள்- 25, ஏகே 47 மகஸின் - 4, ரவைகள் - 811, கிரனேட் - 20, கண்ணீர்ப்புகை அடிப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 10 பொலீஸார் உட்பட 11 பேர் மூதூரில் பலி

### புலிகள் நேற்று தாக்குதல்

திருகோணமலை, மே 4

மூதூர் பகுதியிலுள்ள 64 ஆம் கட்டை பொலீஸ் நிலையம் மீது நேற்று மாலை 5.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

மோட்டார் குண்டுகளின் உதவியுடன் விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதலில் பொலீஸ் நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த 10 பொலீஸாரும் ஒரு படை வீரரும் உயிரிழந்தனர். எட்டுப் பொலீஸாரும் ஒரு படை வீரரும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத் தாக்குதல் சில மணி நேரம் தொடர்ந்து இடம் பெற்றதாகவும் —

தாக்குதலில் வேறும் சிலர் காயமடைந்திருக்கலாம் எனவும் — தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ-9)

## புலிகள் ஆட்லறி தாக்குதல்

வவுனியா, மே. 4

வன்னி ''வெற்றி உறுதி'' யுத்தமுனையில் விடுதலைப் புலிகளின் ஆட்லறி தாக்குதல்களில் ஓர் இராணுவ வீரர் கொல்லப்பட்டார். 9 பேர் காயமடைந்தனர்.

ஒலுமடு, அம்பகாமம் பகுதிகளில் கடந்த வெள்ளி, சனி ஆகிய நாள்களில் இச்சம்பவங்கள் இடம் பெற்றன.

(இ-21)

## அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை

# 'புளொட்' எதிர்த்து வாக்களிக்கும்!

யாழ்ப்பாணம், மே 4

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் போது அதனைஎதிர்த்துவாக்களிக்க புளொட் அமைப்பு முடிவு செய்துள்ளது.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா குருநகரில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் இது பற்றித் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை புளொட் அமைப்பு முன்னர் ஆதரித்து வந்தது. பின்னர் வாக்களிப்பில் பங்குபற்றாது இருந்து வந்தது. தற்பொழுது பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை தொடர்பான விவாதங்களில் புளொட் அமைப்பு தனது நிலைப்பாட்டை அரசுக்குத் தெளிவு படுத்தி இருந்ததாகவும்—

எனினும் அரசு உருப்படியான நடவடிக்கை எடுக்கத் தவறி இருப்பதால் பிரேரணையை எதிர்த்து வாக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கிளைமோர் தாக்கு!

### 5 படையினர் பலியாகினர்

வவுனியா, மே 4

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 க்கு இச் சம்பவம் இடம் பெற்றது.

இராணுவம் பயணம் செய்த டிராக்டர் ஒன்றே தாக்குதலுக்கு உள்ளானது.

ஓர் இராணுவ வீரர் காயமடைந்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## 3 பொலீஸார் உட்பட ஐவர் கல்முனையில் பலி!

### முஸ்லிம் இளைஞன் சூடு

மட்டக்களப்பு, மே 4

கல்முனை பொலீஸ் நிலையத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் மேற்கொண்ட திடீர் துப்பாக்கித் தாக்குதலில் 3 பொலீஸார் உட்பட 5பேர் பலியானார்கள்.

நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சப்இன்ஸ்பெக்டர் 3 பெண் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட மேலும் 6 பொலீஸார் காயமடைந்தனர்.

நேற்று மாலை முறைப்பாடு கொடுப்பதற்காக இந்த முஸ்லிம் இளைஞர் பொலீஸ் நிலையத்துககு வந்திருந்தார் என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## POST OF CLERK

Applications are invited from retired officers who have a good knowledge of english who could draft letters and to guide the management whenever his assistance is required to a Semi-Government Organisation in Jaffna. Apply in English giving Bio-data on or before 9th of May 1998.

No. 733,
C/o. Uthayan,
Jaffna.

(55725)


# மரண அறிவித்தல்கள்

## M. P. கணேசன்

(Rtd. Radiographer Govt. Hospital Jaffna)

பிரான்பற்றை, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட M. P. கணேசன் 03 - 05 - 1998 இல் லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற முருகேசு — பொன்னுச்சாமி (Rtd. Estate Superintendent Malaya), செல்லம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும், இராஜேஸ்வரி—தியாகராஜாவின் அருமைச் சகோதரரும், சுந்தரேஸ்வரியின் அருமைக் கணவரும், காலஞ்சென்றவர்களான சி. சரவணமுத்து (ஓய்வுபெற்ற அதிபர்), சி. ஆறுமுகம் (ஓய்வுபெற்ற விதானையார்) ஆகியோரின் அருமை மருமகனும், கிரிஜா, வனஜா, முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், உதயக்குமார், டினேஸ்குமார் ஆகியோரின் மாமனாரும், செல்லப்பா நடராஜா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட நாடாளுமன்ற அறிக்கையாளர், J. P. கோண்டாவில்), காலஞ்சென்றவர்களான E. S. தியாகராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), பொன்னம்மா இரத்தினமயில்வாகனம், நல்லம்மா சரவணமுத்து, இரத்தினம்மா கந்தையா, சுபத்திரையம்மா ஆறுமுகம் ஆகியோரது மைத்துனரும், Dr. S. S. பாலச்சந்திரன் (மேலதிக பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரம் கண்டி), திருமதி மகேஸ்வரி ஸ்ரீபதி (கோண்டாவில்), Dr, S. குகதாசன் (கண் சத்திர சிகிச்சை நிபுணர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), S. சிவநேசன் (உதவி முகாமையாளர், விவசாயப்பண்ணை, திருநெல்வேலி), திருமதி ஜெகதீஸ்வரி சிவலோகநாதன் (கொழும்பு) ஆகியோரின அருமை மைத்துனரும், வாசுகி நவரட்ணம் (வவுனியா), S. T. வரதராஜன் (கிராம அலுவலர்), S. T. யோகராஜா (இந்தியா), செம்மனச்செல்வி (ஆசிரியை வவுனியா), இராஜராஜன் (லண்டன்), சிவசக்தி (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி) ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் 19, Gade Bridge Road, Hemel Hempstead, Hearts Hp, 3dt, U.K. இல் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி தியாகராஜா
(சகோதரி)
(பிராம்பற்றை, கோப்பாய் வடக்கு)

(55722)

## சின்னத்தம்பி நல்லையா

ஏழாலை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி நல்லையா 03-05-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி சின்னத்தம்பியின் அன்பு மகனும், திரு. திருமதி செல்லப்பாவின் மருமகனும், கனகசபை, காலஞ் சென்ற குணசிங்கம், தங்கராசா (C.T.B.), பாலசுப்பிரமணியம் (C.T.B.), செல்வராணி (இந்தியா) ஆகியோரின் தந்தையாரும், பஞ்சாட்சரதேவி, தவமணி, தயாநிதி, கலாநிதி, ஆ.விக்னராஜா (U.K.) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04-05-98) திங்கட்கிழமை 12.00 மணியளவில் ஏழாலையில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்;
ந. தங்கராசா (C T.B )
(மகன்)

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(55724)

திருமதி

## நீலாயதாட்சி சண்முகம்

(நீலா)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் 6, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலாயதாட்சி சண்முகம் (நீலா) காலமானார்.

இவர் காலஞ்சென்ற ராமுப்பிள்ளை சண்முகத்தின் அன்பு மனைவியும், திருமதி பி. ஜெயதேவியின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற செல்லத்துரை பிறைசூடியின் அன்பு மாமியாரும், உதயணன், நந்தன், ஜடா யூலியட் (பிரான்ஸ்), நமணன், யாமினி, சவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜர்வின் பிரெய்னர் (சந்தனத்தேவன்) அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 3-5-98 ஞாயிற்றுக் கிழமை அன்று நடை பெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி பி. ஜெயதேவி
(மகள்)

(55730)

## கிரிக்கெட் வலைப்பந்தாட்ட வீரர்களுக்கு

அண்மையில் தெற்கே சென்று போட்டிகளில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி வலைப்பந்தாட்ட அணி ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்களையும், வீராங்கனைகளையும் இன்று திங்கள் பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ)

## மெய்வன்மை போட்டிகள்

சாவகச்சேரி கல்விக் கோட்டங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் மூன்று தினங்கள்மட்டுவில் சந்திரபுரம் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற உள்ளன.

நாளைநடைபெறும்போட்டிகள் பி. ப. ஒரு மணிக்கும் புதன்கிழமை நடைபெறும் போட்டிகள் முற்பகல் 8-30 மணிக்கும், வியாழக்கிழமை நடைபெறும் போட்டிகள் பிற்பகல் 1-30மணிக்கும்ஆரம்பமாக உள்ளன. (இ-9)


யாழ்.
**றீகல்** வெண் திரையில்
10-30 மணி
தடயம்
பிற்பகல் 2-30 மணி
பாண்டியன் IPS
அடுத்த வெளியீடு
பிரசாந் நடித்த
ஜீன்ஸ்
(55731)

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்
04-05-98 திங்கள்
விஜய், ரம்பா
நினைத்தேன் வந்தாய்
(CD வெளியீடு)
காட்சி 10- 30 — 2-30
(55723)

**சிவா திரையில்**
கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
காட்சி 10-00 — 1-00
பிரசாந்த், ஐஸ்வர்யா
நடித்த
★ ஜீன்ஸ்
புதிய வெளியீடு
(55717)

எமது
புதிய வெளியீடு
மன்சூர் அலிகான்
நடித்த
வெட்டு ஒன்று
துண்டு இரண்டு
**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/3639)

நினைவூட்டுகின்றோம் !
மாதாந்த
பயிற்சிப் பரீட்சை
நாடு பூராகவும் 11-5-98
திங்கள் காலை 8. 30 மணிக்கு
ஆண்டு 2 முதல் 11 வரை.
BOND
யாழ்ப்பாணம்
(55728)


# வெற்றி தோல்வியின்றி முடிந்த உதைபந்தாட்டம்

## இன்று மற்றோர் ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 4

மாத்தறை நில்மினி விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணிக்கும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் போட்டன.

ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தைச் சுமார் 20 ஆயிரம் மக்கள் கண்டுகளித்தனர்.

முதலாவது கோலை நில்மினி விளையாட்டுக்கழக அணி போட்டது. அடுத்த இரு கோல்களையும் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி போட நில்மினி விளையாட்டுக்கழக அணி மற்றும் ஒரு கோலைப் போடவே ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இன்று மாலை நடைபெறும் ஆட்டத்தில் யாழ். மாவட்ட சம்பியன் அணியான பல்கலைக்கழக அணியுடன் நில்மினி விளையாட்டுக்கழக அணி மோதும். (இ)

## சாவகச்சேரியில் பலருக்கு தொலைபேசி கிடைக்கவில்லை

தென்மராட்சி, மே. 4

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தொலைபேசி இணைப்பு பெற விண்ணப்பித்து எட்டு மாதங்களாகியும் இது வரை தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை என விண்ணப்பித்தோரில் பலர் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு இறுதியில் தொலைபேசி பெறுவதற்காக விண்ணப்பித்து அதற்குரிய கட்டணம் தொலைத் தொடர்புக் திணைக்களத்தில் செலுத்தப்பட்ட போதிலும் இது வரை தொலைபேசித் தொடர்புகள் வழங்கப்படவில்லை என்று விண்ணப்பதாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-117)

## ஜொலி ஸ்ரார்ஸ் கிண்ண போட்டி

யாழ்ப்பாணம், மே 4

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம், இ. எஸ். பேரம்பலம் அன் கம்பனியின் ஆதரவுடன் ஜொலி ஸ்ரார்ஸ் கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் ஒழுங்கைத் தெரிவு செய்யும் நிகழ்வு இன்று மாலை 4.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள கழக அணிகள் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. (உ)

## அகதிகள் உண்ணாவிரத பயமுறுத்தல்

திருகோணமலை, மே 4

திருகோணமலை உப்பாறுப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டு தற்போது ஆலங்கேணி விக்கினேஸ்வரா மகா வித்தியாலய முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் தம்மை உடனடியாக பழைய இடங்களில் குடியேற்ற வேண்டும் எனவும்—

அவ்வாறு குடியேற்றப்படா விட்டால் நாளை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

உப்பாறுப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட 44 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேரே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கைவிடுத்துள்ளனர். (இ-9)

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### கந்தையா மகேந்திரன்

பிறப்பு: 08-08-1942 இறப்பு: 04-05-1982

எனது உள்ளத்தில் என்றும் அணையாத அன்புச் சுடராக ஒளி வீசும் தந்தைக்கு வருடங்கள் 16 ஆனாலும் உங்கள் நினைவுகள் எனது உள்ளத்தை விட்டு நீங்காது!

உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மகன்
M. சக்திகுமார்

46, ராசாவின்தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

(55729)

## மரண அறிவித்தல்

### கனகசபை இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற ஊழியர் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

G. P. S. றோட், கல்வியங்காட்டைச் சேர்ந்த கனகசபை இரத்தினசபாபதி காலமானார்.

அன்னார் வேதவல்லியின் அன்புக் கணவரும், மகேந்திரன் (லண்டன்) சுகுமார், குசலகுமாரி, இரவீந்திரன் (சுவிஸ்), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயராணி ( லண்டன் ) சோமசேகரம் (லண்டன்), நவரத்தினவேலு, ஸ்ரீதரன், அஞ்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, சுபோதினி, அகிலன், ஜீவிதன், சிந்துரா, மதுரா, கீர்த்திகா, சாருஜா, தாருகாஷ், சஞ்சுதா, ஜான்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 3-5-98 அன்று மாலை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

(சி/3640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உள்நாட்டில் தீர்வுகாண்பதையே இந்தியா விரும்புகிறது

கொழும்பு, மே 4

பாரதீய ஜனதாக்கட்சியின் வெளிவிவகாரக் கொள்கை தயாரிப்புக்கான குழுவின் தலைவராக விளங்கும் நாகேந்திரநாத் ஜாவின் இலங்கை விஜயத்தையும் அவர் அங்கு தெரிவித்த கருத்துக்களினால் ஏற்பட்ட சர்ச்சைகளையும் அடுத்து இந்திய அரசு இலங்கை தொடர்பான தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது!

அது 'இந்து' நாளிதழில் வெளியாகியுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தீவிரவாதிகளுடன் எந்தவிதத் தொடர்புகளையும் கொண்டிருப்பதில்லை என்று புதுடில்லி தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகின்றது. அதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இலங்கையில் சம்பந்தப்பட்ட தரப்பினரே உடன்படிக்கைக்கு வரும் பட்சத்தில் இந்திய அரசாங்கம் அதனை ஆதரிக்கும். அத்துடன் முக்கிய அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் காணப்பட வேண்டும் என்ற கருத்தையும் இந்திய அரசாங்கம் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

நாகேந்திரநாத் ஜா தான் தெரிவித்த கருத்தை மறுத்துரைத்துள்ளார். இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுவதைப் போன்றதாக ஜாவின் கருத்துக்கள் இருந்ததாகக் கருதப்பட்டது. ஆனாலும் இந்திய அரசின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஜாவின் கருத்தை இலங்கை அரசாங்கம் பாராமுகமாக கைவிடுவதற்கு தயாராக இருக்கின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிக்கை, இலங்கை அரசாங்கத்தை ஆறுதல் படுத்தியுள்ளது. இலங்கையின் ஐக்கியத்திற்கும் இறைமைக்கும் இந்திய அரசு பூரண ஆதரவு வழங்கும் என்றும் சமாதானமாக பேச்சு வார்த்தை மூலம் இலங்கையர்களே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

மேலும் "ஏற்கனவே இந்தியப் பிரதமர் வாஜ்பாயை சந்திக்க இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு இந்தியா, இலங்கை விவகாரத்தில் தலையிடாது என்றும் இலங்கையுடன் நெருங்கிய சிநேகபூர்வ உறவுகளையும் கொண்டிருக்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஆகவே இந்திய அரசு தெரிவித்த கருத்துக்களின் படி இலங்கை அரசு ஏனையவர்களின் ஒத்துழைப்புடன் தனது இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பது தெளிவாகின்றது.

ஆனால் அமெரிக்கா முயற்சிப்பது போல் ஊக்கமுள்ள இராஜதந்திரத்தின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா முயலாது என்பது வெளிப்படையாகின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

## சமய நிகழ்வில்

யாழ்ப்பாணம், மே 4

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10-30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை6-00மணிக்கு தீரத்தோற்சவமும் நடைபெறும்.

ஒருவருட இடைவெளியின் பின்னர் இடம்பெறும் இம் மகோற்சவத்தில் சமயச் சொற்பொழிவுகள் பலவும் இடம் பெற்று வருகின்றன. (ஐ-6)

★ ★ ★

தென்மராட்சி, மே 4

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும்.

ஆலய மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

மே 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை தேர் உற்சவமும் 10 ஆம் திகதி காலை தீர்த்ததோற்சவமும் நடைபெறும். (ஐ-117)

## முன்பள்ளி கட்டடம் திறப்பு

நல்லூர், மே 4

சங்கானைபிரதேசசெயலர் பிரிவில் சேதமடைந்திருந்த உருத்திரா சனசமூக நிலைய முன்பள்ளிக் கட்டடத்தை அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இணைப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன் அண்மையில் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சங்கானை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. சிவராஜா கலந்து கொண்டார். இக் கட்டடப் புனரமைப்புப் பணிகளுக்கு ஐ. நா. தூதரகம் உதவி வழங்கியது குறிப்பிடத்தக்கது. (ஐ-103)

## மாட்டு வண்டி சவாரி

யாழ்ப்பாணம், மே 4

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் எதிர் வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடத்தப்படவுள்ளது. (ஐ-6)

## வாகனங்கள் சோதனை

தென்மராட்சி, மே 4

சாவகச்சேரி நகரில் வீதியில் சென்ற பல வாகனங்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸாரினால் திடீர் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

காப்புறுதி, வாகனவரி, சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டன. (ஐ-117)

## இரத்தம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 4

யாழ், போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்யுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பொது நிறுவனங்களைச் சேர்ந்தோர் மற்றும் மாணவர்கள் தாமாக முன்வந்து இரத்த வங்கியுடன்தொடர்பு கொண்டால் இரத்தம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் திருமகள் சிவசங்கர் தெரிவித்துள்ளார். (ஐ-15)

## யாழ். பல்கலைக்கழகத்தில் கடல்வள அபிவிருத்தி நிலையம் திறப்பு!

யாழ்ப்பாணம், மே 4

யாழ்-பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக கடல் வள அபிவிருத்தி நிலையம் ஒன்று கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் அதற்கென அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரும், பேராசிரியருமான பொ.பாலசுந்தரம் பிள்ளையினால் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந் நிலையம் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் உத்தியோக பூர்வமாகத் தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் இந் நிலையத்தின் இணைப்பாளராக பேராசிரியர் கா. சிந்திரவடிவேலு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையமானது தேசிய ரீதியிலும் சர்வதேசரீதியிலும் பல்கலைக்கழகங்களுடனும் ஆராய்ச்சி நிலையங்களுடனும் தொடர்புகளை மேற்கொண்டு எமது பிரதேசத்தின் கடல் வளம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதுடன் கடல்வளத் துறையின் விரிவாக்கம், மற்றும் இத்துறை சார்ந்த கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளது. மேலும் பல்கலைக்கழக மட்டத்தில் சகல பீடங்களிலுள்ளோருக்கும்! இத் துறை சார்ந்த ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவும் களமாகவும் இது அமையும், அத்துடன் இந்நிலையமானது எமது பிரதேசத்தில் இத்துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்குவதுடன், கடல் வளப் பீடத்தை அமைப்பதற்கு அடித்தளமாகவும் அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ[

## யாழ். திணைக்களங்களில் ஆளணிப்பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாவட்ட அரச திணைக்களங்களில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதி பிரதம செயலாளர் சே. பரமலிங்கம் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக சிவில் நிர்வாகம் செயற்படத்தொடங்கியுள்ள போதும் யாழ். மாவட்ட அரச திணைக்களங்களிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை. எனவே இப்பிரச்சினைகள் தொடர்பாக சரியான விவரங்கள் திரட்டப்பட்டபின் அவை தீர்த்து வைக்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் விவசாய செய்கை அபிவிருத்தி தொடர்பாக அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுடன் பேச்சு நடத்தியுள்ளோம்.

சந்தை வாய்ப்பு இல்லாமல் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை வேறு இடங்களுக்கு கொண்டுசென்று விற்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

யாழ். விவசாயிகளுக்கு கொழும்பில் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க கொழும்பிலுள்ள அரச திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ-5)

## கணனி வந்தது

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு வடக்கு—கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் கணனி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## கிளாலிப் பகுதியில் பராமரிப்பின்றி 3தேவாலயங்கள்

தென்மராட்சி, மே 4

கிளாலிப் பகுதியில் பிரசித்தி பெற்றமூன்று தேவாலயங்கள் கடந்த இரண்டு வருடங்களாக வழிபாடு இன்றியும் கவனிப்பாரற்றும் காணப்படுகின்றன.

புனித யாகப்பர் தேவாலயம், புனித மிக்கேல் தேவாலயம், புனித தோமையார் தேவாலயம் ஆகியவையே மக்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளன.

இந்த தேவாலயங்கள் படையினரின் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் உள்ளதாலும் இப் பகுதிக்குள் மக்கள் செல்ல அனுமதிக்கப்படாததாலும் இவை கவனிப்பாரற்று உள்ளன.

## பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ராஜினாமா!

இஸ்லாமாபாத் மே 4

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹோகர் அயூப்கான் தனது பதவியைத் திடீரென ராஜினாமாச் செய்துள்ளார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை பிரதமர் நவாஸ் ஷெரீப் ஏற்றுக் கொண்டுள்ள போதும் அவரது ராஜினாமாவுக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை.

அமெரிக்காவுடனான பாகிஸ்தானின் உறவுகள்மிக கடினமான ஒரு காலகட்டத்தைச் சந்தித்திருப்பதாகக் கணிக்கப்படும் இத்தருணத்தில் அயூப்கானின் ராஜினாமா இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் மோதலில் ஈடுபட்டுவரும் ஆயுதக் குழுக்களுக்கு இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இஸ்லாமாபாத்தில் நடைபெற்று வருகின்றன. இந் நிலையில் வெளிவிவகார அமைச்சர் பதவி விலகி உள்ளார்.

தனது அமைச்சரவையை மாற்றி அமைக்க பிரதமர் நவாஸ் ஷெரீப் திட்டமிட்டுள்ளார். அதன் காரணமாகவே வெளிவிவகார அமைச்சர் அயூப்கான்பதவி விலகி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கடந்த 14 மாதகாலமாக அமைச்சர் பதவியை வகித்து வந்த அயூப்கான் உள்நாட்[illegible] வழங்கப்பட வேண்டும் எனக் கோரி உள்ளார். (ஐ-6)

## ஓய்வூதிய அதிகரிப்பு கோரி முன்னாள் கூர்க்கா வீரர்கள் ஆர்ப்பாட்டம்

காட்மண்டு, மே 4

முன்னாள் கூர்க்கா படைவீரர்கள் சுமார் 2 ஆயிரம் பேர் நேபாளத் தலைநகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

பிரிட்டிஷ் படை வீரர்களின் ஒய்வூதியம் போல் தமது ஒய்வூதியமும் அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கோரியே அவர்கள் பேரணி ஒன்றை நடத்தினர்.

1960 களில் வேலையில் இருந்து நீக்கப்பட்ட கூர்க்காப் படை வீரர்களுக்கு முழு ஒய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என இவர்கள் கோருகின்றனர்.

தமது கோரிக்கைகள் ஜூன் மாத நடுப்பகுதியளவில் பூர்த்தி செய்யப்படாவிட்டால் இந்தப் பிரச்சினையை பிரிட்டிஷ் நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். ]ஐ- 6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலிப் பகுதிக்கு
# மின் விநியோகம் இல்லை
## பாவனையாளர்கள் கவலை

அச்சுவேலி, மே4

அச்சுவேலியில் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறியுள்ள போதிலும் அப்பகுதிக்கு இன்னும் மின்விநியோகம் கிடைக்கவில்லை.

இது குறித்து அச்சுவேலி சனசமூக நிலையங்களின் சமாஜம் கவலை தெரிவித்துள்ளது.

அச்சுவேலிப் பகுதியிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் மக்கள் முழுமையாகக் குடியேறியுள்ள போதிலும் பிரதான வீதியுடன் சேர்ந்த குறிப்பிட்ட வீடுகளுக்கு மட்டுமே மின்சார விநியோகம் நடைபெறுவதாகவும் பெருமளவு வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கோரிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவர் பொன்னுத்துரை தெரிவித்துள்ளார். [ஐ - 11]

## யாழ்.ப.நோ.கூ.ச.கிளைகளில்
# இன்று முதல் கட்டுப்பாடின்றி மண்எண்ணெய் விநியோகம்

அரியாலை, மே4

மண்எண்ணெயை கட்டுப்பாடின்றி தாராளமாக விநியோகிப்பதற்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை தொடக்கம் சங்கத்தின் கிளைகளில் மக்கள் தாராளமாக மண் எண்ணெயைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

மண்எண்ணெயை மக்களுக்குத் தாராளமாக விநியோகிக்கும் பொருட்டு போதியளவு மண்எண்ணெய் சங்கக்கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சங்கத்திற்கு தேவையான அளவு மண்எண்ணெயை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-17)

## விவசாய விளை பொருள்களை
# சந்தைப்படுத்தல் பற்றி ஆராயக் குழு நியமனம்

மூளாய், மே 4

வலிகாமம் மேற்குப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவசாய விளை பொருள்களைச் சந்தைப் படுத்துவதற்கான வழி வகைகளை ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் இக் குழுவில் பெரும்பாக உத்தியோகத்தர், விவசாயப் போதனாசிரியர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (ஐ-99)

# சந்தை வாய்ப்பின்றி வெங்காயம் தேக்கம்!
## விவசாயிகள் பாதிப்பு!

அச்சுவேலி, மே 4

வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட யாழ். மாவட்ட விவசாயிகள் வெங்காயத்தை உரிய காலத்தில் சந்தைப் படுத்த முடியாமையால் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

காலபோக பயிர்ச்செய்கையில் பெருமளவில் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டு கணிசமான அளவு விளைச்சலும் கிடைத்தது.

கூடியளவில் உரிய காலத்தில் வெங்காயத்தை விற்பனை செய்தால் பெருமளவு லாபம் கிடைக்கலாம் என விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் எதிர்பார்த்தபடி குறிப்பிட்ட அளவு தொகையைக் கூட விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

விவசாயிகளின் விவசாயக் களஞ்சியங்களில் வெங்காயம் தேங்கிக் கிடக்கின்றது. யாழ். மாவட்ட சந்தைகளில் வெங்காயத்தின் விலை ஒரு கிலோ 10 ரூபாவுக்கு மேல் விலை போகவில்லை.

வெங்காயம் அறுவடை செய்து இரண்டு மாதங்களுக்கு மேலானதால் பெருமளவில் நிறைகுறைந்து இருப்பதுடன் மீண்டும் அவை முளைப்பதற்கு உரிய பருவத்தை அடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

பொருத்தமான சந்தைப் படுத்தல் வசதி இல்லாத நிலையினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-11)

# மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி, மே 4

பளை வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நவுண வெளி விளையாட்டு மைதானத்தில் அதிபர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணியும், சிறப்பு விருந்தினராக பளை கோட்டக்கல்வி அலுவலர் அ. கைலாயபிள்ளையும், கௌரவ விருந்தினர்களாக பளைப் பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன், பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலன், பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-117)

# பளைப் பிரதேசத்தில் மலேரியா கட்டுப்பாட்டில்!

தென்மராட்சி, மே 4

பளைப் பிரதேசத்தில் சுகாதாரத்திணைக்கள மலேரியா தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையினால் இப்பகுதியில் மலேரியாக் காய்ச்சல் பரவுவது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் தினமும் 300-க்கு மேற்பட்டோர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். இவர்களில் 80 பேர் மலேரியாக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டது பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் நாளாந்தம் சராசரி 70 பேர் வரையே காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் பளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 15 பேர் வரையே மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தது பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

பெரும்பாலும் மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் மிருசுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவருகிறது.

சுகாதார திணைக்கள மலேரியா தடுப்புப் பிரிவினர் பளைப்பிரதேசத்தில் மலேரியா காய்ச்சல் கூடுதலாக பரவும் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குச் சென்று பரிசோதனை நடத்தி உரிய மருந்துகளை வழங்கியுள்ளனர். இப் பகுதிகளில் மலத்தியோன் விசிறப்பட்டுள்ளது.

# வலி. மேற்குப் பகுதியில் முதியோர் கல்வித் திட்டம்

மூளாய், மே 4

முதியோருக்கான கல்வி மற்றும் சத்துணவுத் திட்டம் ஒன்று வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தின் முதற் கட்டம் பல்லசுட்டி, பனிப்புலம் ஆகிய பகுதிகளில் நடைமுறைப்படுத் தப்படும். இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை வலி. மேற்கு பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. (ஐ-99)

## குடாக்கடலில்
# கைதான 52 பேர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 3

மன்னிப் பகுதியிலிருந்து யாழ். கடல் நீரேரிப் பகுதியூடாக வந்தபொழுது கடற்படையால் கைது செய்யப்பட்ட 52 பேரையும் பிணையில் செல்ல மல்லாகம் மாவட்ட நீதிவான் அனுமதி அளித்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி காலை விடத்தல் தீவு, நாச்சிக்குடாப் பகுதிகளில் இருந்து நான்கு படகுகளில் வந்த 52 பேரை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இவர்களை விசாரணையின் பின்னர் கடற்படையினர் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

பொலீஸார் இவர்களை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்த போது நீதிவான் இவர்கள் அனைவரையும் பிணையில் செல்ல அனுமதித்து இவர்களை தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைத்தார்.

இவர்களது மறுவிசாரணை எதிர் வரும் ஆறாம் திகதி நடைபெற உள்ளது. (இ-9)

# 58 தபால் ஊழியர்கள் பதவியிலிருந்து நீக்கம்

கொழும்பு, மே 4

தபால் சேவை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் கடமைக்குத் திரும்பாமல் சீர்குலைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக 58 தபால் ஊழியர்களுக்கு பதவி நீக்கக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சேவைக்குச் செல்லாத இவர்கள் தாமாக சேவையில் இருந்து விலகியவராகக் கருதப்பட்டே இவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே 17 பேர் இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர். தற்போது மேலும் 41 பேர் இவ்வாறு நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-21-9)

# புலிகள் ஏற்கக் கூடிய ஒரு தீர்வை கட்சிகள் கூட்டாக முன்வைக்கலாம்
## அமைச்சர் தர்மசிறி யோசனை

கொழும்பு, மே 4

எமது நாட்டில் இடம் பெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் விடுதலைப்புலிகள் ஏற்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தை சகல கட்சிகளும் ஒன்றிணைந்து முன் வைத்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும்.

உல்லாசப் பயணத்துறை விமானப் போக்கு வரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடைபெற்ற போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டைப் பிரித்து கூறு போடுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை. நாடு பிளவுபடாத வகையில் ஒற்றையாட்சியின் கீழ் புலிகள் ஏற்கக்கூடிய தீர்வொன்றை அனைத்து அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து முன்வைக்க வேண்டும். நடைபெற்று வரும் இக்கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நாம் அனைவரும் கட்சி பேதத்தை மறந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

இந்த யுத்தத்திற்கு முடிவு காணாது பொருளாதார வளர்ச்சி காண்பது மிகச்சிரமமானது. அண்மைக்காலங்களில் உலக நாடுகள் பலவற்றில் பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் சாத்தியப்பட்டுள்ளது.

மிக அண்மையில் அயர்லாந்தில் இடம்பெற்ற தீர்க்க முடியாத யுத்தம் என கருதப்பட்ட பிரச்சினைக்கே தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே எமது நாட்டிலும் நிச்சயம் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முடியும்—என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

# சீருடை கிடைக்கவில்லை

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை ஊழியர்களுக்கு நீண்டகாலமாக சீருடைக்கான துணிகள் வழங்கப்படவில்லை என ஊழியர்கள் தெரிவித்தனர்.

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை தற்பொழுது சாவகச்சேரி வைத்தியசாலை வளவில் செயற்பட்டு வருகின்றது.

'மார்பு நோய் வைத்தியசாலை ஊழியர்களுக்கு ஏழு வருடங்களாக சீருடைக்கான துணிவகைகள் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இது பற்றி [illegible] முறையீடு செய்த போதிலும் உரிய பலன் கிடைக்கவில்லை. (ஐ-114)

# சொற்பொழிவு

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இடம்பெற்று வரும் தொடர் சொற்பொழிவில் இன்று திங்கட்கிழமை கலாநிதி ஆ. தியாகராசா மகாவித்தியாலய பிரதி அதிபர் மு. சு. வேலாயுதபிள்ளை "முருகா எனும் நாமங்கள்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

நாளை செவ்வாய்க்கிழமை கல்வி வலயம் இரண்டின் முதன்மை ஆசிரியர் நடேசன் சிவசண்முகமூர்த்தி 'முருகனின் பெருமை" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஐ-7)

# நியமனம்

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ். இந்திரராஜா கடந்த மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மார்பு நோய் வைத்தய நிபுணராக நீண்ட காலம் கடமையாற்றிய டாக்டர் இந்திரராஜா பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு இப் பதவிக்கு மீள நியமனம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலதா மாளிகையைப் பாதுகாக்க முடியாதோர் நாட்டை ஆள முடியுமா?

## கண்டிக் கூட்டத்தில் ரணில் கேள்வி

யாழ்ப்பாணம், மே 4

ஐம்பதாவது சுதந்திரப் பொன்விழாவைக் கண்டியில் கொண்டாடுவதாகக் கூறி பிரபாகரனுக்கு சவால் விட்டுக் கொண்டு ஸ்ரீ தலதாமாளிகையைப் பாதுகாக்கத் தவறியவர்களுக்கு நாம் ஆட்சிக்கு வந்ததும் கட்டாயம் தண்டனை வழங்குவோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேதினத்தை முன்னிட்டு கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ. தே. கட்சியின் மேதினக் கூட்டத்தில் பேசும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

பௌத்தர்களின் முக்கியவழிபாட்டுத்தலமான ஸ்ரீ தலதா மாளிகையைப் பாதுகாக்க முடியாத அனுருத்த ரத்வத்தவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் உடனடியாகவே ராஜினாமாச் செய்ய வேண்டுமென தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட அன்றும் கூறினேன்; அதையே இன்றும் கூறுகின்றேன்.

அரசாங்கமோ தலதாமாளிகையைப் பாதுகாப்பதை விடுத்து கண்டி போகம்பரை விளையாட்டரங்கில் கேளிக்கைகளை நடத்துகிறது.

எமது அரசாங்கக் காலத்தில் தலதா மாளிகையின் பாதுகாப்புக்கென தண்டவாளத் தடைகள் ஆங்காங்கே போடப்பட்டிருந்தன. தலதா மாளிகையைப் பாதுகாக்க முடியாதவர்கள் எவ்வாறு இந்த நாட்டை ஆள முடியும்?

சந்திரிகா தலைமையிலான அரசைக் கவிழ்த்து எமது சக்தியைக் காட்டுவதற்காகவே இந்த மேதினத்தை நாம் கொண்டாடுகின்றோம்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பண்ணிசை வகுப்புக்கள்

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இலவச பண்ணிசை வகுப்புக்கள் பிரதி திங்கள், வெள்ளி ஆகிய நாள்களில் மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

பண்ணிசை வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் மேற்படி தினங்களில் சமுகமளிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். [ஐ-17[

உ
சிவமயம்

### வைத்தியநாதக்குருவே வாழி!



பக்தியொடு பண்பாடு சீலம் சாந்தம்
பல்கலையின் முதிர்ஞானம் வடமொழியில்
வித்தகஞ்சேர் செந்தண்மை அந்தணாளன்
விளங்கும் உயர் சிவாகமங்கள் வளர்த்த செம்மல்
எத்தனையோ எண்ணற்ற ஆலயங்கள்
எழிலுறவே ஆகமக்கிரியை யாகம்
சித்தமகிழ் வெய்திடவே புரிந்த அண்ணல்
சிவஸ்ரீ வைத்தியநாதக் குருவே வாழி!

அமரர் சிவஸ்ரீ
**பால. வைத்தியநாத சிவாச்சாரியாரின்**
பாதாரவிந்தங்களுக்குச் சமர்ப்பணம்.

பிரம்மஸ்ரீ ச. சர்வேஸ்வரசர்மா (சபா)
மட்டுவில் வேரக்கேணி.
கந்தசுவாமி கோயில்.
(55720)

## லயன்ஸ் வருடாந்த மாநாடு

திருநெல்வேலி, மே 4

சர்வதேச லயன்ஸ் 306 'பி' மாவட்டத்தின் வருடாந்த மாநாடு எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக தபால், தந்தி தொடர்புகள், வெகுஜனத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர கலந்து கொள்வார்.

1997—98 வருடகாலத்திற்கான புதிய 306பி மாவட்ட ஆளுநராக லயன்— மாலிக் சபீர் லயன் கழக உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் இம் மாநாட்டில் தெரிவு செய்யப்பட விருப்பாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த லயன்ஸ் கழக பிரமுகர்களும், பிரதிநிதிகள் பலரும் இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு செல்லவுள்ளதாக பிராந்திய லயன்ஸ் ஆலோசகர் லயன் எஸ். எஸ். தங்கராஜா தெரிவித்தார்.

(ஐ-135)

## விவசாயிகளுக்கு கடனுதவி

மூளாய், மே 4

வட்டுக்கோட்டை மற்றும் அராலிப் பகுதிகளில் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடன் உதவி வழங்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடனேயே மேற்படி கடன் உதவி வழங்கப்படவுள்ளது. (ஐ-99)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம் தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(55674)

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகத்தில்:
25 — 01 — 1932
விண்ணகத்தில்:
29 — 04 — 1993

அமரர்
**வீரகத்தி முத்துலிங்கம்**
(உரிமையாளர், லிங்கம்ஸ் பான்ஸிகுட்ஸ், சாவகச்சேரி.)
திதி: 04-05-1998

ஐ பன்னிரு திங்கள் சென்றதப்பா!
ஐயா உங்கள் திருமுகம் கண்டு நாங்கள்
ஆறாத் துயரில் இருந்து அழுந்துகின்றோம்
ஆறுதல் தருவது யாரப்பா?
எம் இதயத்தில் என்றும் வீற்றிருக்கும் இதய
தெய்வமே!
எப் பிறப்பில் இனி உங்களை நாம் காண்போம்?
எமை வளர்த்தெடுத்து ஆளாக்கிய தெய்வமே!
என்றென்றும் உங்கள் ஆத்மா இறையடியில்
இன்புற்றிருக்க இறைஞ்சுகிறோம்.

— குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(சி/3637)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
16 — 07 — 1917

மறைவு:
04 — 04 — 1998

திருமதி
**வைரமுத்து தங்கம்மா**

அன்புதனை அருவியாக்கிப் பண்புதனைச் சிகரமாக்கிப்
படிக்காத மேதையான எம் பாசமிகு அம்மாவே!
முப்பத்தொரு தினங்களென்ன மூவுலகம் சென்றாலும்
அனுதினமும் தொழுவோம் அம்மா!
அசைபோட்டு வாழ்வோம் தாயே!
ஓலமிட்டே பார்த்து நின்றோம்
ஓடி வரமாட்டாயோ?

எங்கள் அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நாவற்குழி கிழக்கு,
கைதடி.
(55704)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி இரத்தினசபாபதி நாகேஸ்வரி

தோற்றம்:
29 — 08 — 1921

இறைபதம்:
05 — 04 — 1998

ஆனதோ மாதமொன்று வேதனையோ
தாளவில்லை
நோயென்றும் படுக்காது குறியேனும்
காட்டாது
மீளாத்துயில் கொண்ட பாசக் குலவிளக்கே!
கண்கண்ட தெய்வம் இங்கு உன்போலுளதோ
அமைதி வழியினிலே சுமைகள் பல சுமந்திட்டாய்
உன்தயவின்றித் தவிக்கின்றோம்
இனி ஆரிடம் முறையிடுவோம்?
அல்லல் மிகு உலகில் ஆறாது எம்துயரம்,
மாறாது உன்நினைவு.
அன்புத் தெய்வமே! உன் ஆன்மா சாந்திபெறப்
பணிகின்றோம் இறைவனடி.

-குடும்பத்தினர்

28, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை.
(55714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

*வீடு வாடகைக்கு*

ஆடியபாத வீதியில் மருத்துவபீடத்திற்கு முன்பாக சோதனைச்சாவடிக்கு அண்மையில் அமைந்துள்ள 7 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. மாணவர்கள் விடுதி நடத்துவதற்கும் உகந்தது. தொடர்பு: திருமதி ப. கைலைநாதன், C/o திருமதி பஞ்சலிங்கம், அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. [55706]

*தவறிவிட்டது*

யா / ஹாட்லிக கலலூரி மாணவன அ. அஜந்தன் என்பவரது 090809841 இலக்க விசேட அடையாளஅட்டை, பாடசாலை அடையாள அட்டை, இராணுவ பதிவு அட்டை (இல. 28, Brigade 626745) என்பன அடங்கிய பேர்ஸ் பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கும், 1 ஆம் கட்டைச்சந்திக்கும் இடையில் 27-4-98 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யா / ஹாட்லிக்கல்லூரியில் ஒப்படைக்கவும். [55721]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## கலைப்பீடப் பரீட்சைகள் 1996

முதலாம் ஆண்டுகலை/ வர்த்தகம்/ முகாமைத்துவம் பரீட்சைகள் - 1996

பொதுக்கலைமாணிப் பரீட்சை பகுதி – i, ii — 1996
சிறப்புக்கலைமாணிப் பரீட்சை பகுதி— i, ii, iii — 1996
வர்த்தக மாணிப் பரீட்சை பகுதி — i, ii, iii – 1996

மேற் குறித்த 1996 ஆம் கல்வி ஆண்டுக்குரிய பரீட்சைகளுக்குத் தகுதியுடைய மாணவர்கள் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையிலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையின் உதவிப் பதிவாளருக்கு 1998–05–30 ஆம் திகதிக்கு முன்னராகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50 வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி தாம் பெற்றுக்கொண்ட உரிய பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1998 – 05 – 30 ஆம் திகதிக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

- பதிவாளர்

(சி-3631)

தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்



## அருண் புளொக் தயாரிப்பாளர்

அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம் யாழ். வலயம் - 2

## முறைசாராக்கல்விப்பிரிவு
## ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து

இடம்:- யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி.
கல்வித்தகமை:- க. பொ. த. சாதாரணம், ஆங்கிலத்தில் சித்தி.

தகுதியானவர்கள் விண்ணப்பங்களை அதிபரிடமிருந்து பெற்று 9 ஆம் திகதிக்கிடையில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

அதிபர்,
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி,
கரவெட்டி.

(சி/3634)

## அறிவித்தல்

எமது சங்கத்தில் முன்னர் வகுப்புத் தொழில் புரிந்த சகல தொழிலாளர்களையும் மீண்டும் வேலைக்குச் சமுகந் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் வகுப்புத் தொழிலில் அனுபவம் உடைய புதியவர்களும் அழைக்கப்படுகின்றனர்.

தொடர்பு:

19/2, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
ஜி பி. எஸ். தொழிலாளர் கூட்டுறவுத் தொழிற்சங்கம் லிமிட்டெட்.

(55683)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### நாகேஸ்வரி சதாசிவம்

திதி: 04 - 05 - 98

பிறப்பு: 20—06—1940
இறப்பு: 15—04—1997


ஓர் ஆண்டு சென்றும் காதில்
உன் குரல்தான் கேட்குதம்மா!
கற்பனையோடு வாழ்ந்த எம்மை
கனவுடன் வாழ வைத்தாய்
நீ உதிர்ந்து போனாய் ஆனால்
குடும்பத்தில் உன் விளக்கு எரியுதம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
அம்பாளைப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
சகோதரன், பெற்றோர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

[55362]

## ஓராண்டு நெஞ்சுருகும் நினைவலைகள்



மண்ணில்: 30 — 01 — 1930
விண்ணில்: 04 — 05 — 1997

திருமதி
### லில்லிதவமணி நல்லதம்பி

அன்னையாய் தெய்வமாய் ஆதரித்த அன்புருவே!
எண்ணுகின்ற வேளையெல்லாம் எம் நெஞ்சு கருகுதம்மா;
இன்னுமோர் முறை வந்தே எம்மை நீ காப்பாயோ?
உன்னடிக்கே கண்ணீரை அஞ்சலித்து நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்.

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(55394)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

01—05—1998 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட
**புனித அந்தோனியார் கல்லூரி**
கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

| இடம் | இலக்கம் |
|---|---|
| 1 ஆம் பரிசு | 1062 |
| 2 ஆம் பரிசு | 1570 |
| 3 ஆம் பரிசு | 536 |

ஆறுதல் பரிசுகள்
1566, 468, 947, 1608, 301,
1657, 1585, 703, 206, 466,

(55719)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
### மதியாபரணம் அரசம்மா

(மண்கும்பான்)

மலர்வு: 16 — 05 — 1926
உதிர்வு: 14 — 05 — 1997

திதி: 04–05–1998

ஓராண்டு சென்றும் அம்மா உங்கள்
பிரிவுத்துயர் ஆறவில்லை; எனினும்
நூறாண்டு சென்றாலும் உங்கள்
பாசம் நிறை அன்பை மறவோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ம. யோகராசா, றீயோ கிறீம்ஹவுஸ்,
புங்குடுதீவு – 1.

(55652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இயலாமையா?

தங்களால் சில விவகாரங்களை வெற்றிகரமாகக் கையாள முடியாமற் போனதும், வேறு ஒரு சாரார் மீது விரைந்து பழி சுமத்தத் துணிபவர்கள் அரசியல்வாதிகள். தமது இயலாமையை மூடி மறைத்து, மக்கள் தம்மீது அதிருப்தி கொள்ளாமல் — ஆதரவை விலக்காது—இருப்பதற்காக சம்பந்தப்பட்ட விவகாரத்தின் பின்னணியில் மாற்று அரசியல் வாதிகளோ அல்லது அரசியல் கட்சியோ இருப்பதாக இலகுவில் குற்றஞ்சாட்டி விடுவார்கள்.

இந்த அரசியல் உத்தியை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளார் போலத் தோன்றுகிறது. சுமார் ஒரு மாத காலம் வரை நடைபெற்று வரும் தபால் ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே. வி. பி. யும் உள்ளதாக ஜனாதிபதி குற்றஞ்சாட்டத் தொடங்கி உள்ளார். இக்குற்றச்சாட்டில் எந்தளவுக்கு உண்மை உண்டென்பது தெரியாது.

அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி, தபாற் சேவையை அரசு அத்தியாவசிய சேவையாக்கிப் பத்து நாள்கள் நகர்ந்து விட்ட போதிலும், சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்கங்கள் மசிந்ததாக இல்லை.

தபாற் பகுதியைத் தனியார் மயமாக்கும் அரசின் முடிவுக்காக, அதனை இடுக்கி முடக்கிவிடும் செயற்பாடே சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தனியார் மயமாக்குவது தொடர்பாகத் தொழிற்சங்கங்கள் தெரிவித்த எதிர்ப்பை அரசு பொருட்படுத்தாமற் செயற்படுவதற்குப் பதிலடியாகவே சட்டப்படி வேலை இயக்கம் நடத்தப்படுகிறது என்றும் கருதப்படுகிறது.

தபால் ஊழியர்கள் அரசை வஞ்சம் தீர்ப்பதற்காக, சொந்தத்திலோ அல்லது வேறு அரசியல் சக்திகளின் தூண்டுதலிலோ மக்கள் நலன் கருதாது செயற்படுவது கண்டிக்கப்பட வேண்டியதாகும். அது வேறு.

ஆனால் அரசு தனது இயலாமையை மறைப்பதற்காக ஐ. தே. கட்சி, ஜே. வி. பி. மீது பழி போடுவது மக்களைத் திசை திருப்பும் ஒரு முயற்சியே.

மேலும் நாட்டு அலுவல்களில் ஜே. வி. பியின் தலையீடு மீண்டும் அதிகரித்து வருவதாக, ஜனாதிபதி சந்திரிகா சாடியுள்ளார்.

ஜே. வி. பிக்கு நாட்டில் ஆதரவு அதிகரித்து வருகிறது என்பதனை மறைமுகமாக ஒப்புக் கொள்வதாகவே ஜனாதிபதியின் இக்கூற்று அமைகிறது.

போரைத் தொடர்ந்தால், அதற்காகப் பெரும் பணத்தைச் செலவிடுவதால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தால், வேலையில்லாப் பிரச்சினை வளர்ந்து வாழ்க்கைச் செலவு உயர்ந்தால் மக்கள் வேறு — மாற்று — அரசியல் சக்தியை நாடுவார்கள் என்பது ஜனாதிபதிக்கு இதுவரை தெரியாமற் போனது ஏன்?

இந்தக் கட்டத்திலாவது போரை நிறுத்தி அதற்குச் செலவாகும் பணத்தை மக்கள் நலனுக்குப் பயன்படுத்தலாம். காலம் இன்னும் பிந்தி விடவில்லை.

# வீதிகளை சைக்கிளால் அடைத்து பயணிகளை வதைக்கும் இளசுகள்

வீதியை தமக்கே சொந்தமாக நினைத்து அதனை முழுவதும் அடைத்துக் கொண்டு கூட்டமாகச் செல்லும் வழக்கம் இன்றைய யாழ்ப்பாணத்து இளைஞர் யுவதிகளிடையே நாகரிகமாக மாறிவிட்டது.

''ராகிங்'' போன்ற பழக்க வழக்கங்களை நாகரிகமென நினைத்து அவற்றையே கைக்கொள்ளப் பழகிக்கொண்ட யாழ்ப்பாணத்து இளையவர்கள் சற்று வித்தியாசமாக தமக்கேயுரிய யாழ்ப்பாணத்து நாகரிகமாக வீதியைஅடைத்துக்கொண்டு சைக்கிள் ஓடுவதை அறிமுகப்படுத்தியது மட்டுமன்றி நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர்.

பாடசாலை, ரியூசன் போன்ற கல்வி நிலையங்களுக்கு செல்லும்ச் போதும், முடிந்துவரும்போதும் ஆண், பெண் வேறுபாடின்றி' இளம் பராயத்தவர் கூட்டமாகச் செல்வதால் வீதிகளால் போக்குவரத்துச் செய்யும் ஏனையோர் சிரமங்களையும், நெருக்கடிகளையும், விபத்துகள் ஆபத்துக்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ். குடா நாட்டில் இப்போது வாகனங்களின்போக்குவரத்து அதிகரித்துள்ளது. அத்துடன் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் வீதியின் பெரும்பகுதியை அடைத்துக்கொண்டு செல்லக்கூடிய பாரிய வாகனங்களாகவும் விளங்குகின்றன. எரிபொருள் தட்டுப்பாடு அதிகளவு குறைந்துள்ளதால் மோட்டார் வாகனங்களின் பாவனையும் அதிகரித்துள்ளது.

வீதிகள் குறிப்பிட்டளவு விசாலத்தையே கொண்டு அமைந்திருப்பதால் 'சைக்கிள்' பாவனையாளர்கள் தனித்தனி செல்வதே விபத்துக்களையும், நெருக்கடிகளையும் தவிர்ப்பதற்கு உகந்த வழி.

மற்றும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் நெருக்கடியற்ற போக்குவரத்துக்கு வழி சமைக்கலாம். போர் அனர்த்தங்களால் இழப்புக்களை சந்தித்து தற்போது சற்று ஓய்ந்திருக்கும் மக்கள் வீதி விபத்துக்களால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைஎந்த வகையிலும் ஜீரணிக்கக்கூடிய மனநிலையில் இல்லை. ஆனால் வீதிகளை அதிகளவில் ஆக்கிரமிக்கும் இளையவர்கள் இதுபற்றி கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. 'எனது கார் எனது றோட், எனது பெற்றோல்' என்ற ரீதியில் அவர்கள் இவ்வாறு செய்வதனை ஒரு பெரும் ''சுதந்திரம்' என்று எண்ணுகிறார்கள்!

சில இடங்களில் விபத்து நிகழும் போது நாம் பாரிய வாகனம் ஓட்டி வந்தசாரதிகளையே ஏசுகின்றோம். சாரதிமதுபோதையில் இருக்கிறாரா என்று ஆராய முற்படுகின்றோம். ஆனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பதை ஆராயத் தவறுகின்றோம். இதனால் பிறர்மீது வீண் பழி சுமத்துகின்றோம் என்பதை உணர்வதில்லை. பல வேளைகளில்

**இளவல்**

வாகனங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாமல் சாரதிகள் சமநிலை தவறுவதற்கு கூட்டமாகச் செல்லும் இளையவர்களே காரணமாகின்றனர்.

## வீதி விபத்துக்கு உடந்தையாவோரை நீதிமன்றில் நிறுத்தி தண்டிக்கமுடியாதா

### முதியோரின் திட்டுகள்

நாம் தினமும் வீதிகளால் பயணம் செய்யும் போது வீதிப்பாவனையாளர், குறிப்பாக முதியவர்கள், கூட்டமாகச்செல்லும் இளம் பராயத்தவரைப் பார்த்து கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டுவதை அவதானிக்கமுடிகிறது. உடல் தளர்ந்து மூப்படைந்த நேரத்தில் அவசர காரியமாக மட்டுமே வீதியில் சைக்கிளில் வரும் முதியவர்கள் இளையவர்களின் வீதி ஆக்கிரமிப்பினால் அல்லலுறுகின்றனர். தமது சமநிலை தளம்பி விபத்துக்குள்ளாகின்றனர். இதனை உரியவர்கள் ''பகிடி'' யாக எடுக்கின்றனரேயன்றி அது மற்றவர்களுக்கு ''வதை'' யாக மாறுகின்றது என்பதை உணர்வதாகஇல்லை.

''காவோலை விழக் குருத்தோலை சிரிக்கிறது'' என்பது போன்று குதூகலிக்கின்றனர். இன்று துள்ளும் இவர்கள் என்றும் ''மார்க்கண்டேயரைப் போல் இளமையாகஇருக்கப்போவதில்லை. இவர்களும் எதிர்காலத்தில் துன்பப்படும் போது தான் தமது கொடுமைகளை உணர்வார்கள்.

படையினரின் சோதனைச் சாவடி காரணமாக அநேகமாக பிரதானவீதிகள் அனைத்திலும் அனைவரும் இறங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சில வீதிகளில் சிற்சில வேளையில் இவ் விதி தளர்த்தப்படுகின்றது. இதனை தமக்கு சாதகமாக்கும் இளைஞர் யுவதிகள் கூட்டமாக அதன்வழி செல்ல முற்படுவதால் அவர்கள் படையினரால் தண்டிக்கப்படுவதுடன் மீண்டும் தடை பிறப்பிக்கப்படுகிறது. ஏனையவர்களும் அதனால் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை அண்மைக் காலத்தில் வாகனங்களும் பெருகி, போக்குவரத்துக்களும் அதிகரித்துள்ளன. அதனால் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படும்வாய்ப்பு உண்டு.

### காரணங்கள்

★ பல பிரதான வீதிகளில் ஒருவழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படாமை.

★ பாடசாலைகள், நிறுவனங்கள் தினமும் ஆரம்பிக்கும் நேரத்திலும், முடிவடையும் நேரத்திலுமாவது வீதிக் கண்காணிப்புப்பொலீஸாரை கடமையில் ஈடுபடுத்தாமை.

★ மக்கள் அதிகம் பயன்படுத்தும் பிரதான வீதிகளிலுள்ள நாற்சந்திகளில் வீதிக் கண்காணிப்புப் பிரிவினரைக் கடமையில் ஈடுபடுத்தாமை.

★ வீதிச் சமிக்ஞைகளை உரிய இடங்களில் குறிப்பிடாமையும், அவற்றை சாரதிகள் மற்றும் வழிப்போக்கர்கள் பூரணமாக அறிந்திராமையும்.

★ ரியூசன் மாணவர்கள் தமது சைக்கிள் வண்டிகளை வீதியை அண்மித்து சாரிசாரியாக நிறுத்துதல்.

★ வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்போரை நீதிமன்றம் மூலம் தண்டிப்பது இன்னும் முழு அளவில் செயற்படாமை.

மேற்கூறிய காரணங்களாலும் பிற காரணங்களினாலும் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனினும் ''திட்டம் போட்டு திருடும் கூட்டம் திருடிக் கொண்டேஇருக்குது; அதைச் சட்டம் போட்டுத் தடுக்கும் கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்குது. ''திருடனாகப் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' என்பதுபோன்று வீதிப்பாவனையாளர்கள் தாமே உணர்ந்து செயற்படாவிட்டால் விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

இளைஞர்கள் வீதி ஒழுங்கை மீறி கூட்டமாகச் செல்லும் அதே வேளை, ஒருபடி மேலாக யுவதிகளும் தாம் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்று காட்டுவது போல கேலி பேசிச் சிரித்த வண்ணம் கூட்டமாகச் செல்கின்றனர். யாழ்ப்பாணத்தின் பெருமைக் குரிய பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்ட முதியவர்களின் மனத்திலே இச் செயல்கள் அதிருப்தியை, அருவருப்பை ஏற்படுத்துகின்றன.

எது எப்படியோ? வீதி ஒழுங்கை அதிகமாக மீறும் இளைஞர்களே! யுவதிகளே! சொல்லாமல் செய்பவர் பெரியார்; சொல்லிச் செய்பவர் சிறியவர்: சொல்லியும் செய்யார் கயவர்.

இதில் நீங்கள் எந்தவகை? உங்களுக்கே வெளிச்சம்!

★

### சேவை நீடிப்புப் பெற்ற

# 50 பொலீஸ் அத்தியட்சகர்கள் விரைவில் ஓய்வு பெறுவர்

கொழும்பு, மே 4

58 வயதைப் பூர்த்தி செயய உள்ள பொலீஸ் அத்தியட்சகர்கள்மற்றும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் சுமார் 50 பேர் விரைவில் ஓய்வுபெற உள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சேவை நீடிப்பால் தொடர்ந்து பதவிகளை வகிக்கும் இந்த 50 அதிகாரிகளால் பொலீஸ் அத்தியட்சகர்களாகவும், உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்களாகவும் பதவி உயர்வுகளைப் பெற தகுதி பெற்றிருக்கும் சுமார் 50 பேருக்கு பதவி உயர்வுகளை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேவை நீடிப்பால் தொடர்ந்துபதவிகளை வகிக்கும் 58 வயதைப் பூர்த்தி செய்ய உள்ள அதிகாரிகளிடம் ஓய்வுபெற விரும்புகிறீர்களா? எனக் கேட்கப்பட்ட போது அவர்கள் அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என பொலீஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-10-9)

## நாளை

சித்திரை - 22

செவ்வாய்க்கிழமை

திதி: நவமி

முற்பகல் 9.39 வரை.
நட்சத்திரம்: மகம்
மாலை: 6. 42 வரை.
சுபநேரம்: 10.26 –11.56
ராகுகாலம்: 2.56-4.26

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆகார நியமம் மிக அவசியமானது. அறிவையும் அன்பையும் கெடுக்கக்கூடிய ஆகாரத்தை அருந்தாதே; தூய உணவை உட்கொண்டு [illegible] தூக் கொள்.

-கீதை

## தொலைபேசி நிலையம்

சண்டிலிப்பாய், மே 4

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப் பகுதி மக்களின் நலன்கருதி மானிப்பாயில் தொலைபேசித் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றை விரைவில் திறப்பதற்கு தீர்மானித்துள்ளது.

(ஐ- [illegible])

## மக்கள் செல்ல அனுமதி

தென்மராட்சி, மே 4

வடமராட்சி கிழக்குப் பகுதிகளான தாளையடி, மருதங்கேணி, சோரன்பற்று, மாசார் ஆகிய பகுதிகளுக்கு இப்பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பகுதி மக்கள் செல்வதற்கான தடை கடந்த முதலாம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளது.

விசேட அடையாள அட்டை வைத்திருப்போர் இப் பகுதிகளுக்குச் சென்று வர முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தாளையடியிலிருந்து பளைவரை மருதங்கேணி, புதுக்காடு, வண்ணான்கேணி ஆகிய சோதனைச் சாவடிகளில் சோதனை நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டு கத்தாப்பு தோட்ட சோதனைச் சாவடியில் மட்டும் வாகனங்களில் வருவோர் சோதனையிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யுத்தம் நிறுத்தப்படா விட்டால்

# அந்நிய சக்திகளிடம் சுதந்திரத்தை இழக்கும் நிலை மீண்டும் ஏற்படலாம்

## மேதின விழாவில் எச்சரிக்கை

திருநெல்வேலி, மே 4

''நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும் இக்கொடிய யுத்தம் நிறுத்தப்பட்டு இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக்காண முற்பட வேண்டும். நாடு 50 வருட சுதந்திர பொன்விழாவைக் கொண்டாடும் இக்கால கட்டத்தில் யுத்தம் தொடர்ந்து நடைபெறுமானால் அந்நிய ராட்சியின் பிடிக்குள் நாடு மீண்டும் சிக்கி சுதந்திரத்தை இழந்து விடக்கூடிய ஆபத்து ஏற்படும்''.

புதிய ஜனநாயகக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கலை இலக்கிய பேரவையின் தலைவரும், ''தாயகம்'' ஆசிரியருமான க. தணிகாசலம் இவ்வாறு குறிப்பிட்டார்.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு கட்சியின் வட பிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன் தலைமை வகித்தார்.

க. தணிகாசலம் தொடர்ந்து உரையாற்றுகையில்—

யுத்த சூழலைச் சாட்டாக வைத்து அமெரிக்க ஏகாபத்தியம்படிப்படியாக தனது கால்களை இந்நாட்டில் பதித்து வருகின்றது. திறந்த பொருளாதாரக் கொள்கைகளும், சுதந்திர வர்த்தக வலயங்களும் தொழிலாளர்களின் உரிமைகளை ஒடுக்கி வருகின்றன. தொழிலாளர் வர்க்கம் தனது அடிப்படை உரிமைகளுக்காக ஒன்றிணைந்து போராட வேண்டும் — என்றார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் வடபிரதேச செயலர் கா. கதிர்காமநாதன் தமது தலைமை உரையில் கூறியதாவது:-

எமது பிரதேசத்தில் விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்த முடியாது மிகவும் கஷ்டப் படுகின்றார்கள். மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க முடியாது அல்லற்படுகின்றனர். படித்த — பட்டம் பெற்ற இளைஞர்களும் யுவதிகளும் வேலைவாய்ப்புக்கள் பெறமுடியாது சிரமப்படுகின்றனர். எமது பொருளாதாரத்தை அழித்துக் கொண்டிருக்கும் உயிர்களை உடைமைகளை அழித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அமைதியும்சமாதானமும்ஏற்பட்டாலே எமது வாழ்வில் சுபீட்சம் ஏற்படும் — என்றார்.

''நவலங்கா'' தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் கா. பஞ்சலிங்கம், கு. மோகன். செல்வி கே. ஞானாஞ்சினி, செல்வி கு. பாலினி ஆகியோர் உட்பட மற்றும் பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பெண்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ-135)

# குடிசையில் தீப்பற்றி குழந்தை எரிந்து காயம்

யாழ்ப்பாணம், மே 4

அடுப்பு பற்றவைத்த நெருப்பு குடிசையில் பற்றி எரிந்ததில் குடிசைக்குள் இருந்த 4 மாதப் பெண் குழந்தை தீக்காயங்களுக்குள்ளானது. குடிசையும் தீக்கிரையானது.

திருநெல்வேலி சிவன் கோயில் வீதிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் விஜயகுமார் விதுஜா(வயது நான்குமாதம்) என்ற குழந்தையே தீப்பற்றி எரிந்து காயமடைந்தது.

காயமடைந்த குழந்தை யாழ், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குழந்தையை தனியாக படுக்கவைத்து விட்டு, சமையலுக்காக அடுப்பைப் பற்ற வைத்து விட்டு ஏதோ தேவைக்காக தாய் வெளியே சென்ற சமயமே, தீ குடிசையில் பற்றி எரிந்ததாகவும், அதைக் கண்டு ஓடிவந்து குழந்தையை மீட்ட போது, குழந்தை தீப்பற்றி எரிகாயங்களுக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மிதி பலகையில் நின்றவர் தவறி வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், மே 4

ஓடிக் கொண்டிருந்த பஸ் வண்டியில் இருந்து விழுந்து ஒருவர் காயமடைந்தார்.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த பஸ்வண்டியில் பயணிகள்நெருக்கடி காரணமாக பஸ்வண்டியின் மிதிபலகையில் தொங்கிக்கொண்டு பயணம் செய்தவர்களில் ஒருவரான, கொழும்புத்துறை, இரண்டாம் குறுக்கைச் சேர்ந்த செல்வராசா ஜெயபாலன் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

பண்ணைப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஐ-15-139)

# தொழிற்சங்கங்களின் ஒற்றுமையே தொழிலாளர்களுக்கு விமோசனம்!

## மேதினக் கூட்டத்தில் உரை

திருநெல்வேலி, மே 4

''நீண்ட காலப் போராட்டங்களின் பயனாக தொழிலாளர் வர்க்கம் பெற்ற உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். தொழிற் சங்கங்கள் தம்முள் ஐக்கியப்பட்டு தொழிலாளர் நலனுக்காக ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் தொழிலாளர்கள் பெரும் பயனடைய முடியும்.''

தொழிற் சங்கங்களின் கூட்டு மேதினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் செயலாளர் கு. தவராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கப் பிரமுகர் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இம் மேதினக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் —

''தொழிலாளர்கள் தங்கள் உரிமைகள் என்ன தொழிற் சங்கங்களின் செயற்பாடுகள், பணிகள் என்ன என்பன பற்றிய விவரங்களை பூரணமாக அறிந்து கொள்ளதவண்டும். சர்வதேச நாடுளேில் தொழிலாளர் வர்க்கம் கமது ஜீவாதார உரிமைகளை பெறுவதற்கு பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்துள்ளன. இவ்வாறு கட்டப்பட்டு பெறப்பட்ட உரிமைகளை எமது தொழிலாளர் வர்க்கம் பெற்று பயனடைய தடையாக இருக்கும் சக்திகளை இனங்காண வேண்டியது அவசியம்'' என்றார்.

வங்கி ஊழியர் சங்க யாழ். மாவட்ட செயலாளர் ரி. சிறிஸ்கந்தராசா உரையாற்றுகையில் கூறியதாவது:-

'யுத்தத்தினால் வங்கி ஊழியர்களும் பெரும் பாதிப்படைந்து வருகின்றார்கள். அத்துடன் வங்கிகளில் ஊழியர் பற்றாக்குறை அதிகளவில் நிலவி வருவதால் வேலைப்பளுஏற்படுகின்றது. சமயா சமய ஊழியர்கள் பலர் 10 வருட காலமாக கடமையாற்றி வந்துள்ள போதிலும் அவர்களுக்கு நிரந்தர நியமனம் இன்னும் வங்கி நிர்வாகத்தினால் வழங்கப்படவில்லை. நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே எமக்கு விடிவு காலம் ஏற்படும் என்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் ச. தியாகலிங்கம் உரையாற்றுகையில்:- கல்வித்திணைக்களத்தில் இடமாற்ற சபை சரிவர செயற்படுத்தப்படாதிருப்பதால் ஆசிரியர்கள், அதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கமைய இடமாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். பதவி உயர்வுகளிலும் சுற்றறிக்கைகளுக்கு மாறான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்சங்கங்களின் ஆலோசனைகளை அதிகாரிகள் உதாசீனம் செய்யும் நிலை மாற வேண்டும்— என்றார்.

யாழ். பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர் சங்க உபதலைவர் எஸ். கமல்ராஜி உரையாற்றுகையில் —

பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் தொழிலாளர் கற்கை நெறிகள் தொழிலாளர்களுக்கு நன்மைபயப்பனவாக மாற்றியமைக்கப்படவேண்டும். பல்கலைக்கழக ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை முறியடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவே இது பற்றி இறுதிமுடிவுகளை எடுக்க வேண்டும். எமது ஒன்றுபட்ட போராட்டமே எமக்கு விடிவைத் தரவல்லது — என்றார். (ஐ-135)

# மனையியல் கூடம் அமைக்க நிதி உதவி

அச்சுவேலி, மே 4

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் இரண்டு லட்சம் ரூபா செலவில் மனையியல் கூடம் அமைக்கப்படவுள்ளது.

மனைப் பொருளியல் பாடத்தை உரியமுறையில் கற்பிப்பதற்கு வகுப்பறை இல்லாமல் இருந்ததால் மாணவிகள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

இதற்கான நிதி ஜனாதிபதி நிதியில் இருந்து வழங்கப் பட்டுள்ளது. (ஐ-11)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் க. கந்தையா

மலர்வு! 03-11-1912 உதிர்வு: 05-04-1998

வளலாயைப் பிறப்பிடமாகக் கொண்ட க. கந்தையா 05-04-1998 அன்று துணுக்காயில் சிவபதம் அடைந்தார்,

இவர் மாணிக்கத்தின் அன்புக்கணவரும், திரவியம், தியாகராசா M.A. (திட்டமிடல் பகுதி), குணலிங்கம் (களஞ்சியக் காப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை), மகிழம்மா, சிவகுரு (முன்னாள் தபாலதிபர், தபாலகம், யாழ்ப்பாணம் - டென்மார்க்), தர்மரத்தினம் (சுவிஸ்), ஸ்ரீஸ்கந்தராசா (டென்மார்க்), சுந்தரலிங்கம், அமரர் தங்கமலர். அமிர்தலிங்கம் (ஜேர்மன்), ஜெயபாலசிங்கம் B. Sc. (Hons - Maths -Ceylon-Computor Engineer Norway, கனடா), அமரர் ரவிச்சந்திரன், ரவிவதனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்வமணி, செல்வராணி (ஆசிரியை), இராசேஸ்வரி, சிவபாதம், விஷ்ணுரூபி (டென்மார்க்), சிவபாக்கியம் (சுவிஸ்), மங்களேஸ்வரி (டென்மார்க்), தவமலர், மாலினி (ஜேர்மன்), சற்குணமலர் (Electronic Engineer - Norway கனடா), கணேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரதிஸ்ரனி, உதயசூரியன், சுதர்சினி, சுதன்குமார், சுயேந்திரகுமார், சுகாசினி, வதனன், அரவிந்தன் (இந்தியா), பிரதீபன், தங்கமலர், தாரணி, கதாதரன், பவதாரிணி, யுகதாரிணி, ஜெயதாரிணி, சீவகன் (டென்மார்க்), சுகந்தி, சுகன்யா, சிவதர்சன், சிவாதரன், சிவாஸ்கரன், சுநீதன் மற்றும் டென்மார்க்கைச் சேர்ந்த சிவரூபி, சிந்துஜா, அனேஜான், நிலோஜா, ஐஸ்மின், ஜெனிஸா, சுவிஸைச் சேர்ந்த மயூரன் மகிந்தன், மெளனிகன், ஜேர்மனியைச் சேர்ந்த அகல்யா, அஜானிகன், அஸ்லிகா, கனடாவைச்சேர்ந்த கோகுலன், புதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், நிசாகரா, ஜனாகரா, ஜான்ஸிகரா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், எமதுஉளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 05-05-1998 நாளை செவ்வாய்க்கிழமை துணுக்காயில் நடைபெறும். அன்றையதினம் வளலாயிலும் இடம்பெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

துணுக்காய்.
வளலாய். (சி/3638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் மற்றொரு கிளர்ச்சிக்கு ஜே. வி. பி. தயாராகி வருகிறது!

## அதன் முன்னாள் தலைவர் ஒருவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 4

ஜே. வி. பி இயக்கத்தினர் நாட்டில் மூன்றாவது முறையாகக் கிளர்ச்சி ஒன்றில் ஈடுபட ஆயத்தமாகி வருகின்றனர்.

இவ்வாறு முன்னாள் ஜே. வி. பி. அங்கத்தவர்களைக் கொண்ட மக்கள் விடுதலை ஒருமைப்பாட்டு முன்னணி என்ற அமைப்புக்குதலைமை வகிக்கும் கலாநிதி கமால் கருணதாஸ தெரிவித்தார்.

ஜே. வி. பி இயக்கத்தினர் தற்போது தொழிற்சங்கங்கள், மாணவர்சங்கங்கள், அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றுக்குள் ஊடுருவி வருகின்றனர். மீண்டும் இந்நாட்டில் பெரும் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்துவதே இவர்களது நோக்கம் என்று கலாநிதி கருணதாஸ மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் தற்போது ஏற்பட்டு வரும் தபால் ஊழியர் சங்கப் பிரச்சினையின் பின்னணியில் ஜே. வி. பியினர் உள்ளதாகவும்அண்மையில்ஸ்ரீயெஜவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மாணவர் கோஷ்டிகளுக்கு கிடையிலான மோதல்களின் பின்னணியிலும் ஜே. வி. பி இருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவர்களது தற்போதைய நடவடிக்கை எதிர்க் கட்சியினருக்கு சாதகமாகஅமைந்துள்ளது என்றும் கலாநிதி கருணதாஸ குறிப்பிட்டுள்ளார். (இ-6)

## புளொட் தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், மே 4

தெற்கிலிருந்து வந்துள்ள மாத்தறை நில்மினி விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணிக்கு புளொட் அமைப்பினர் நேற்று தேநீர் விருந்து அளித்தனர். (இ)

## ஆள் இல்லாவீட்டில்திருட்டு சுதுமலையில் சம்பவம்

சுதுமலை, மே 4

வீடு ஒன்றின் ஓட்டைப் பிரித்து வீட்டுச் சாமான்களைத் திருடர் திருடிச் சென்ற சம்பவம் சுதுமலை வடக்கில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்த வீட்டுக்காரர்கள் கொழும்பு சென்றிருந்த சமயம் இந்தத் திருட்டு இடம் பெற்றது. வீட்டில் இருந்து திருடப்பட்ட பொருள்களின் பெறுமதி 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் என்று கூறப்படுகிறது.

திருடர்கள் அங்கிருந்த ரேடியோ, ரீ.வி, சில்வர் பாத்திரங்கள், அலுமாரி, கதிரை, மேசை மற்றும் குசினிக்குத் தேவையான பாத்திரங்கள் ஆகியவற்றை வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்றிருப்பதாக நம்பப்படுகிறது.

வாகனச் சத்தம் கேட்டதாகவும் தாம் பயத்தினால் வெளியில் வரவில்லை எனவும் அயலவர்கள் தெரிவித்தனர். (இ-139)

## தபால் சேவை இன்னும் சீரடையவில்லை

கொழும்பு, மே 4

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகக் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற 'பிக்கெட்டிங்' போராட்டத்தில் பங்கு கொண்ட ஊழியர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தபால் திணைக்களம் தயாரித்துள்ளதாகத் தபால் தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

தபால்சேவை. அத்தியாவசிய சேவையாக பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதனால் கடமைக்குச் செல்லாத தபால் ஊழியர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காகவே அவர்களது பெயர் விவரங்களைத் தபால் திணைக்களம் திரட்டியிருப்பதாகத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தபால் சேவை ஊழியர்களின் இந்தப் பிரச்சினை காரணமாக நாடெங்கும் தபால் சேவை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க வின் எதிர்காலம் சூனியமாகி விடும்

### கணேசலிங்கம் எச்சரிக்கை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்டத்துக்கு ஐ. தே. க. ஒத்துழைப்பு வழங்காவிடின் அக்கட்சியின் எதிர்காலம் சூனியமாகிவிடுமென்று முன்னாள் கொழும்புமேயர் கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

ஐ. தே. க. காலத்துக்குக் காலம் இனப்பிரச்சினைத் தீர்வு என்ற போர்வையில் சில யோசனைகளை முன்வைப்பது வழக்கம் தான்.

அதே போன்ற ஒரு பயனற்ற யோசனைதான் ஐ. தே. க. தற்பொழுது முன்வைத்துள்ள மாற்று யோசனை ஆகும்.

இந்த யோசனை தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யப் போவதில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினைத் தீர்வில் இதய சுத்தியுடன் செயல்படுகின்றார். இவரின் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாது போனால் இனிமேல் ஒருபோதும் இப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டப்போவதில்லை.

யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்மக்களின் விருப்பமாகும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-10)

## பாதுகாப்பு அனுமதி பெற்றோரில் 220 பேருக்குத் தொலைபேசி

### எஞ்சியோருக்கு மாத இறுதியில்

யாழ்ப்பாணம், மே 4

யாழ். நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளில் தொலைபேசிக்கு விண்ணப்பித்து பாதுகாப்பு அனுமதி பெற்றுக்கொண்ட 300 பேரில் 220 பேருக்கு தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப் பட்டுவிட்டன.

மேற்கண்ட தகவலை ரெலிகொம் நிறுவன வட பிராந்திய பொதுமுகாமையாளர் கனகசூரியர் தெரிவித்ததாக 512 ஆவது படையணியின், கட்டளைத் தளபதியும் யாழ் — நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு இணைப்பு அதிகாரியுமான பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் தெரிவித்தார்.

எஞ்சிய 80 பேருக்கான தொலைபேசி இணைப்புகள் இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நல்லூர், பிறவுண் வீதி, முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருக்கள் ஆகியவையும் இவற்றில் அடங்கும் (இ)

## பூவரசங்குளம் ஊடான போக்குவரத்து ஓகஸ்ட் முதல் சாத்தியமாகலாம்

### பாதை செப்பனிடும் வேலை ஆரம்பம்

வவுனியா, மே 4

இராணுவக் கட்டுப்பாடு அற்ற வன்னிப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் பூவரசம்குளம் பாதையூடாக ஓகஸ்ட் மாதம் முதல பயணம் மேற்கொள்ள முடியும் என்று வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

''வெற்றி உறுதி'' படை நடவடிககை ஆரம்பமானதை அடுத்து தாண்டிக்குளம் பாதை ஊடாக மேற்கொள்ளப்பட்டு வந்த போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

இதனையடுத்து பூவரசங்குளம் பாதை ஊடாா பயணத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கி இருந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் இடையே இப்பாதை தொடர்பாக ஒரு முறுகல் நிலை காணப்பட்டு வந்தமையால் இப்பாதை திறக்கும் மற்றும் சீர் செய்யும் வேலைகள் தடைப்பட்டிருந்தன. தற்சமயம் இந்த முறுகல் நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து பெருந்தெருக்கள் திணைக்களம் வவுனியாவிலிருந்து பூவரசம் குளம் வழியான பாதையினை செப்பனிட ஆரம்பித்துள்ளது.

கடந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பாதை செப்பனிடும் நடவடிக்கை மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் —

செப்பனிடும் வேலைகள் பூர்த்தியடைந்ததும் பெரும்பாலும் ஓகஸ்ட் மாதம் முதல் வவுனியாவில் இருந்து துணுக்காய் வரை இப்பாதை வழியாக பிரயாணம் செய்ய முடியும் எனவும் பெருந்தெருக்கள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-164-9)

## பிரேமா நினைவுதின வைபவத்தில் ஐ. தே. க. தலைவர்கள் இல்லை

கொழும்பு, மே 4

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நினைவஞ்சலி நிகழ்வுகளில் ஐ. தே. கட்சியினர் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி கொழும்பு அளுக்கடையில் அமைந்துள்ள பிரேமதாசாவின் சிலைக்கு மலர்சூட்டும் வைபவத்திலோ அதற்கு முதல் நாள் இரவு சுஸரிதத் மண்டபத்தில் இடம்பெற்ற சமயச் சடங்குகளிலோ ஐ. தே. கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

ஐ. தே. கட்சியின் முன்னாள் செயலாளர் சிறிசேன கூரே, திருமதி ஹேமா பிரேமதாசா அவரது மகள், மகன் ஆகியோரே இவ் வைபவங்களில் கலந்துகொண்டனர்.

## நோயாளரின் அசமந்தப் போக்கே மலேரியா குணமடையாததுக்குக் காரணம்

யாழ்ப்பாணம், மே 4

மலேரியாவின் தாக்கம் தொடர்ந்து காணப்படும் இக்கால வேளையில் மலேரியாவில் இருந்து விடுபட நோயாளிகளின் ஒத்துழைப்பே மிக அவசியம் என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மலேரியா நோயினால் பீடிக்கப்பட்ட பலர், மலேரியாவில் இருந்து முற்றாக விடுபடாது திரும்பத் திரும்ப இந் நோய்க்கு உள்ளாகி சிகிச்சைக்கு வருவது அதிகரித்து வருகிறது.

இந் நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருபவர்கள் வைத்தியரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அதற்குரிய சிகிச்சையும் அளிக்கப்பட்டு. சுகம் அடைந்த நிலையில், தொடர்ந்தும் பாவிக்க வேண்டிய மருந்துகளைக் கொடுத்து அனுப்பப்படுகின்றனர்.

மருந்தை முடியும்வரை பாவிக்கும்படி அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

ஆனால் நோயாளர்கள் அதைக் கவனத்தில் கொள்ளாது குணம் அடையும்போது மருந்து வகைகளைப் பாவிக்காது இடைநிறுத்திக் கொள்கின்றனர்.

மலேரியாவுக்குரிய மருந்து வகைகளை டாக்டர் அறிவுறுத்தியபடி முடியும் வரை பாவிக்காது விடுவதினாலேயே மலேரியா மீண்டும் மீண்டும் வருவதாகவும்—

முற்றாகச் சுகம் பெறாத நிலைக்கு நோயாளி தள்ளப்படுவதாகவும் டாக்டர்களினால் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

## அணிகளை தெரிவு செய்ய நடைபெறும் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 4

வடக்கு—கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றும் அணிகளைத் தெரிவு செய்வதற்காக யாழ். கல்வி வலயம் 1, வலயம் 2 ஆகியன இணைந்து நடத்தும் போட்டிகள் நேற்று முன் தினம் முதல் நடைபெற்று வருகின்றன.

இன்று மாலை நல்லூர் விக்கினேஸ்வரா மைதானத்தில் நடைபெற உள்ள மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியை எதிர்த்து அரியாலை ஸ்ரீ பார்வதி விளையாட்டு அணியும் —

19 வயதுப் பிரிவில் அரியாலை ஸ்ரீ பார்வதி விளையாட்டு அணியை எதிர்த்து கனரத்தினம் மகாவித்தியாலய அணியும் மோத உள்ளன.

நாளை காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ள 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து அணியை எதிர்த்து திருக்குடும்ப கன்னியர் மட அணியும்,

யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணியும் —

17 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் வடமராட்சி இந்து அணியை எதிர்த்து கனகரத்தினம் மகாவித்தியாலய அணியும்,

சண்டிலிப்பாய் இந்து அணியை எதிர்த்து சுண்டிக்குளி மகளிர் அணியும்—

19 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் வட இந்து மகளிர் அணியை எதிர்த்து வேம்படி மகளிர் அணியும், இராமநாதன் அணியை எதிர்த்து கனகரத்தினம் மகாவித்தியாலய அணியும் மோத உள்ளன. (இ-9)

## குருபூசை

அளவெட்டி சைவ வாலிபர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த திருநாவுக்கரசு நாயனார் குருபூசை சென்றமாதம் 22 ஆம் திகதி அளவெட்டி அழகொல்லை பிள்ளையார் கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அளவெட்டி அகெழால்லைப்பகுதி இளைஞர்களின் பங்களிப்பு குருபூசை சிறப்பாக நடைபெற உதவியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெற்றி உறுதி படையுடன் வன்னியில் புலிகள் மோதல்

''வெற்றி உறுதி'' இராணுவநடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் சிறுசிறு மோதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மாங்குளத்துக்கு அருகில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இரண்டு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் காயமடைந்தனர்.

இப்பகுதியில் காவலரண் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும்—

வவுனிக்குளத்துக்கு வடகிழக்கே இடம்பெற்ற மோதலில் இரண்டு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும்—மேலும் தெரிவிக்கப்பட்டது.

# ராணுவம் போன்று உடை அணிந்து இரவு நேரம் சுழிபுரத்தில் திருட்டு

வட்டுக்கோட்டை, மே 4

சுழிபுரம் பகுதியில் இரவு நேரங்களில் இராணுவ உடை அணிந்து சென்று வீடுகளில் திருட்டில் ஈடுபடுவதாக சந்தேகிக்கப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உட்பட ஆறு பேர் கைதாகியுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை இரவு தொல்புரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் வீட்டுப் பகுதியில் இராணுவம் போன்று உடையணிந்த சிலர் நடமாடினர்.

இராணுவம் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருப்பதாக நம்பி அவர் வீட்டின் வெளியே செல்லவில்லை.

அதிகாலையில் எழுந்து பார்த்தபோது கோழிக்கூட்டில் இருந்த எட்டுக் கோழிகள் காணாமற்போய் இருந்தன.

இரண்டின் தலைகள் வெட்டி கூட்டுக்கு அருகில் வீசப்பட்டுக் கிடந்தன. கூட்டின் அருகில் காணப்பட்ட சப்பாத்து அடையாளங்களின் வழியே சென்றபோது மேற்படி அடையாளங்கள் ஒரு வீட்டு வளவுக்குள் சென்றதைக் கண்டனர்.

கிராம உத்தியோகத்தர்களுடன் வீட்டினை சோதனை செய்ய முற்பட்டபோது வீட்டில்இருந்தவர்கள் சோதனை செய்வதை தடைசெய்த காரணத்தால் உடனடியாக சுழிபுரம் இராணுவ முகாமுக்கு தகவல் அனுப்பப்பட்டது.

வீட்டில் உள்ளவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டபோது கோழித்திருட்டு தெரியவந்ததாம்.

கோழிக்கான பெறுமதி மூவாயிரம்ரூபாவை அவர்கள் செலுத்தியதுடன் இச் செயலுக்கு மன்னிப்பும் கோரினர்.

இருப்பினும் இவர்களுக்கும் இப் பகுதியில் நடைபெற்ற பல திருட்டுச் சம்பவங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் தம்மால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

உண்மை நிரூபிக்கப்படும் பட்சத்தில் இவர்களுக்குத் தம்மால் கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் சுழிபுரம் இராணுவ முகாம் பொறுப்பாளர் தெரிவித்தார். (இ-12)

### ஐ. நா...

(முதலாம் பக்கத்தொடர்)

இடம் பெயர்ந்து தங்கி வாழும் மக்களையும்—

நேரில் சந்தித்து நிலைமைகளை அவதானிப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒங்டுனு வன்னிக்கு வருவதை அடுத்து அந்த இரு தினங்களும் போர் ஒய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு ஐ.நா.சிறுவர்நிதியம் விடுத்த வேண்டுகோளை ஏற்றே விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் போர் ஒய்வு பற்றிய பிரகடனத்தை வெளியிட்டுள்ளார் என ''புலிகளின் குரல்'' வானொலி நேற்றிரவு அறிவித்தது.

வன்னி செல்லும் ஒட்டுனு அங்கு விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் சிலரையும் சந்தித்துப் பேச்சுநடத்துவார் எனவும் அந்த வானொலி தெரிவித்தது.

இந்த இரு தினங்களும் இராணுவத்தினரும் போர் ஒய்வை மேற்கொள்ள உள்ளனர் என தகவல்கள் தெரிவிப்பதாகவும் புலிகளின் குரல் வானொலி மேலும் அறிவித்தது. (இ-9-6-164)

## உப்பாறு பகுதியில் தேடுதல்

திருகோணமலை,மே4

திருகோணமலை உப்பாறு பகுதி நேற்று அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தப் பகுதியை நோக்கி மேலும் பெருமளவு துருப்புக்கள் நேற்றுக்காலை அனுப்பி வைக்கப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-9)

## மட்டுவிலில் தேடுதல்

கொழும்பு, மே 4

மட்டுவில் தெற்கில் கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்துத் தேடுதல் நடத்திய படையினர் தற்கொலைப் படையாளிகள் பயன்படுத்தும் மேலுடை, 4 கைக்குண்டுகள், ரி—56 ரகத் துப்பாக்கி ஒன்று, சயனைட் வில்லை ஒன்று, தோட்டாக்கள் போன்றவற்றைக் கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (இ-9)

300 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின்

1. நாடகம் எழுதுவது எப்படி?

என்பதை விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல்

2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள்

யாழ்ப்பாண இடம் பெயர்வின் கதை.
வீரகேசரியில் தொடராக வெளிவந்த
கட்டுரைகளின் தொகுப்பு நூல்

எங்கும் கிடைக்கும் ரூபா 50-00

(55705)

தவறிவிட்டது

தாமோதரம்பிள்ளை பாஸ்கரன் NO: 8, ஸ்ரேசன் றோட், கொழும்பு— 6 என்பவரது தேசிய அடையாள அட்டை (562793500V), சாரதி அனுமதிப் பத்திரம் இலக்கம்— D. L. 422236, LION AIR பயணச் சீட்டு ஒன்று, மோட்டார் சைக்கிள் வரிப் பற்றுச்சீட்டு என்பன பெரிய மணிப்பேர்ஸ் ஒன்றுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுகூர்ந்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

த. கங்காதரன்
''கஜா மோட்டோர்ஸ்,''
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(55726) (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக)

### மாஞ்சோலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கருவி - 1, கண்ணீர்ப் புகை குண்டு 10, பரல் - 9, எல். எம்ஜி இடுப்பு பட்டி- 3, வெவின் - 7, ஆகியன விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

### தபால்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திலும் கொழும்பு மத்திய தபால் நிலையத்திலும் வேலை பகிஷ்கரிப்பு வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தபால்சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதாகவும் தபால் தொலைத்தொடர்பு சேவைகள் சங்கத்தின் செய [illegible] தெரிவித்தார். (இ-6)

# கல்முனையில் மாணவன் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலி!

மட்டக்களப்பு,மே4

கல்முனையில் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர் ஒருவர் பலியானார்.

நேற்றுக்காலை கல்முனை பிரதேசத்தில் சுற்றிவளைப்பு தேடுதல் இடம்பெற்றது.

இறந்த மாணவர் பொடி அப்புகாமி ஜெயகாந்தன் (வயது19) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப மாணவன் விசேட அதிரடிப்படையினரைக் கண்டு ஓட முயன்ற சமயமே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

# சிப்பாய் ஒருவர் காரணமா?

வவுனியா, மே 4

வவுனியாவில் நேற்றுஇடம்பெற்ற ஆயுதக் களஞ்சிய வெடி விபத்துக்கு இராணுவச் சிப்பாய் ஒருவரின் தவறே காரணமாகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள தகவல் ஒன்றின் படி மின் ஒழுக்குக் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனவும்-

இச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குப் எந்தத் தொடர்பும் இல்லை என தாம்நம்புவதாகவும்- குறிப்பிடப்பட்டுள்ளது

## மூன்று முறிப்பு மோதலில் ஒருவர் களப்பலி

வவுனியா, மே 4

கிளிநொச்சி மாவட்டம் மூன்று முறிப்புப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் நாவுக்கரசு அல்லது சிதம்பரம் (கதிரமலை அன்பழகன் — யாழ்ப்பாணம்) என்ற போராளி களப்பலியானதாக 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. (இ-9-164)

### வன்னிப்...

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்ததால் திறந்திருந்த ஒரு சில கடைகளும் அவசர அவசரமாக மூடப்பட்டன.

முதல் குண்டு வெடித்த சத்தத்தைக் கேட்டதும் சூசைப்பிள்ளையார்குளம், கோயில்குளம், தேக்கவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் நகரை அண்டிய பகுதியில் இருந்த மக்களும் தாக்குதல் ஆரம்பமாகியதாகக் கருதி தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர் என்றும்—

நேற்றிரவு வரை அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாமல் பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளார்கள் எனவும்— எமது வவுனியாச் செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

### அவசரகால...

(முதலாம் பக்கத் தொடர்)

களிக்க முடிவு செய்திருப்பதாக கிருபைராஜா தெரிவித்தார்.

பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பதற்கு புளொட்டினால் பின்வரும் காரணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

★ அரசின் நடவடிக்கைகள் காரணமாக கடற்றொழிலாளர்கள் பலர் தொழில் இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ அரச பயங்கரவாதம் காரணமாக உயிரிழந்தவர்களுக்குவைக்கப்பட்ட நினைவுக் கற்கள் கூட அழிக்கப்பட்டுள்ளன.

★ மக்கள் கைதாகும் சம்பவங்கள் தொடருகின்றன.

★ காணாமற் போகும் சம்பவங்களும் தொடருகின்றன.

★ கொழும்பிலும் தமிழ்க்கள் சொல்லொணா கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

★ கடந்த தடவை அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது, பிரேரணையை எதிர்த்துவாக்களிக்கப்போவதாக புளொட் உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர் என்றும் கிருபைராஜா கூறினார். (இ)

## 4 படையினர் காயம்

கொழும்பு, மே 4

நேற்று முன்தினம் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற கிரனேட் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் நான்கு படையினர் காயமடைந்தனர் எனவும் —

இவர்கள் அனைவரும் பலாலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் — படையினர் தரப்பு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

### 3 பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்)

முறைப்பாட்டைப் பதிவு செய்துகொண்டிருக்கையில் பதிவு செய்யும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலீஸ் சார்ஜண்டின் துப்பாக்கியைப் பறித்து தாக்குதல் நடத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாரின் பதில் தாக்குதலில் இவரும் உயிரிழந்தார்.

கல்முனைப் பொலீஸ் நிலையத்தில் திடீரெனத் துப்பாக்கி வேட்டுகள் கேட்டதால் ''விடுதலைப் புலிகள் நுழைந்துவிட்டனர்' என நகர் எங்கும் வதந்தி பரவிப் பரபரப்பை ஏற்படுத்தியது.

தகவல் அறிந்து விசேட அதிரடிப்படை, இராணுவம் என்பன அங்கு விரைந்து வந்தன.

இச்சம்பவம் காரணமாக கல்முனை நகரில் கடைகள் மூடப்பட்டன போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டன.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் விடுதலைப் புலியா? அல்லது வேறு அமைப்புகளுடன் தொடர்புடையவரா? என பொலீஸார் விசாரணை செய்கின்றனர்.

விடுதலைப்புலி உறுப்பினர் தான் முஸ்லிம் அடையாள அட்டையுடன் வந்திருக்கலாம் என்றும் பொலீஸார் கூறுகின்றனர்.

அதே சமயம் கல்முனையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரிடம் பயமுறுத்திப் பணம் பறிக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலீஸ் நிலையத்துக்கு இவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார் என்றும் —

இவர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களில் ஒருவர் என்றும் — அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-9-6-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] மனையில், 4-5-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org